அது கூட்டுறவுத்துறையில் ஏற்படுத்தப்பட்டது. மேலும் அங்கே 20, 40 கவுண்டுகள் தான் உற்பத்தி செய்கிறோம். அங்கே நெசவுத் தொழிலைக்கொண்டுவருவது கூட்டுறவுத் துறையைப் பாதிக்கும்.

### *Visit of Trade Mission to Tamil Nadu*

* 404 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a team of Businessmen led by Mr. Noel Burne, visited this State around 12th March 1973;

(*b*) if so, whether they held any discussions with the Hon-Minister; and

(*c*) the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) & (உ) தூதுக்குழுவின் தலைவர் திரு. நோயல் பர்ன் என்பவரும் பர்மிங்காம் தொழில் வணிகத்துறை கழகத்தின் செயலாளரும் என்னைச் சந்தித்துப் பேசினர். பேச்சு வார்த்தைகள் பொதுப்படையான முறையில் அமைந்திருந்தது.

THIRU N. DENNIS: Sir, may I know the places they had visited in the State other than the Madras City and whether they had made any suggestions of common interest to the Stae ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பொதுவாக இப்படி வெளி நாட்டில் இருந்து வருபவர்கள் பல மாநிலங்களுக்குச் சென்று அங்கேயுள்ள தொழில் வாய்ப்புகளையும், எதிர்காலத்தில் டெக்னிகல் கொலாபரேஷன் மூலமாக புதியதாக என்ன என்ன தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்கிறார்கள். இங்கே வேறு எதுவும் குறிப்பிட்டுப் பேசப்பட வில்லை.

### கோவை மாவட்டத்தில் நிலப்பட்டாக்கள் வழங்கல்

* **405 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1973 நவம்பர் 26]

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) கோவை மாவட்டத்தில் 1—4—1967 முதல் 31—3—1973 முடிய 24,734.32 எக்கரா நிலங்களே 10,894 பேர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டன. இது தவிர, 1972-73 ஆண்டில் 300 ஏக்கரா முட்காடு மற்றும் புதர் நிலங்களும் நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயத்திற்காக ஒப்படை செய்யப்பட்டன.

**ஆதீனங்கள், மடங்களின் கீழுள்ள பிரிஹோல்ட் நிலங்கள்**

*406 **வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதீனங்களுக்கும், மடங்களுக்கும் உட்பட்ட பிரிஹோல்ட் (Free-hold) நிலப்பரப்பில் அடங்கியுள்ள புறம் போக்கு நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துக் களுக்கு ஒப்படை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த நிலங்களின் விவரங்கள் யாவை? மாவட்டவாரியாக?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆதீனங் களுக்கும் மடங்களுக்கும் உட்பட்ட பிரிஹோல்ட் நிலப்பரப்பில் தற்போது உள்ள நில பாகுபாட்டின்படி புறம்போக்கு என எந்த நிலமும் பாகுபாடு செய்யப்படவில்லை. எனவே அவைகளேப் பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படை செய்வது சம்மந்தமாக செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திருப்புவனம் ஒன்றியத்தில் இணைப்புச் சாலைகள்**

*407 **வினு—திரு. த. சோனேயா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் (Category II) இணைப்புச்சாலைக்கு அரசு எத்தனை சதவிகிதம் மானியம் வழங்கியுள்ளது ?